**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. 98/2015**

**Date** : 29.01.2026

**வா.சா. 1 – செந்தில்மணி**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873.**

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**.

நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் Central Merine fisheries என்ற கம்பெனியில் SRF (senior research fellow) ஆக பணியாற்றி வருகிறேன். வழக்கை எதற்காக தாக்கல் செய்கிறேன் என்றால் பிரதிவாதிகள் என்னுடைய இடத்தில் அத்து மீறி நுழையாமல் இருப்பதற்காகவும், செற்றில்மெண்ட் Deed 1165/2015 யை ரத்து செய்ய கோரியும் மற்றும் பிரதிவாதிகள் அத்துமீறி கைவசம் வைத்திருக்கும் சொத்தை மீட்டு தரவும். வழக்கின் 3 ம் பிரதிவாதி எனது சகோதரி என்றால் சரிதான். வழக்கு ஏ பட்டிகை சொத்து தற்போது 3 ம் பிரதிவாதி பெயரில் உள்ளது என்றால் சரிதான். 3 ம் பிரதிவாதி பெயரில் எத்தனை சென்ட் மனை உள்ளது என்றால் 2 ¾ சென்ட். 1, 2 பிரதிவாதிகளின் பெயரில் எத்தனை சென்ட் மனை உள்ளது என்றால் 2.125 சென்ட். மேற்படி 2.125 சென்ட் இடம் 3 ம் பிரதிவாதி பெயரில் இருந்து அதனை 1 மற்றும் 2 ம் பிரதிவாதிகளுக்கு கிரயம் கொடுத்துவிட்டர்கள் என்றால் சரிதான்.

3 ம் பிரதவாதிக்கு நான் எனது தந்தை மற்றும் எனது சகோதரி அனைவரும் சேர்ந்து எழுதிக்கொடுத்த விடுதலை பத்திரத்தின் அடிப்படையில் மேற்படி 2.125 மற்றும் 2 ¾ சென்ட்டும் 3 ம் பிரதிவாதி பெயரில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி பாகத்தை விடுதலை பத்திரமாக எழுதிக்கொடுத்தது எந்த வருடம் என்றால் நியாபகம் இல்லை. மேற்படி பத்திரத்தில் எத்தனை சென்ட் மொத்தமாக கொடுத்தேன் என்றால் 4.875 சென்ட்.

மேற்படிசொத்து எங்களுக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் எங்கள் தாத்தாவின் சொத்து. எனது தாத்தாவிற்கு எவ்வாறு சொத்து கிடைத்தது என்றால் விலைக்கு வாங்கினார். விலைக்கு வாங்கியதாக கூறும் பத்திரத்தில் மொத்தம் 4 சென்ட் தான் விலைக்கு வாங்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 3 ம் பிரதிவாதி 1 மற்றும் 2ம் பிரதிவாதிகளுக்கு கொடுத்த விலைபத்திரத்தில் மேற்கு மற்றும் தெற்கு பக்கம் தனது கிடப்பு என்று குறிப்பிட்டு எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். 1 மற்றும் 2ம் பிரதிவாதிகள் எனது சொத்திற்குள் என்றைய தினம் அத்துமீறி நுழைந்தார்கள் என்றால் 11.03.2015 அன்று. மேற்படி தேதியில் நான் வேலைக்கு சென்றேனா என்றால் அந்த தேதியில் நான் வேலைக்கு சேரவில்லை. 2015 ம் வருடம் நான் என்ன வேலை செய்து வந்தேன் என்றால் பெயிண்டிங் வேலை.

**வழக்கு 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது**.